## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.
## பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு செப்டம்பர்/அக்டோபர் 2017 தனித் தேர்வர்கள் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல்
## செய்திக்குறிப்பு

நடைபெறவுள்ள செப்டம்பர்/அக்டோபர் 2017 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வெழுத அரசுத் தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பித்த அனைத்து தனித்தேர்வர்களும் (தட்கல் உட்பட) **16.09.2017 (சனிக்கிழமை)** அன்று முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று **SSLC SEPTEMBER/OCTOBER 2017 EXAMINATION – HALL TICKET DOWNLOAD"** என்ற வாசகத்தினை **"Click"** செய்து, தோன்றும் பக்கத்தில் தங்களது விண்ணப்ப எண் (Application Number) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்தால் அவர்களுடைய தேர்வுக் கூட அனுமதிச் சீட்டு திரையில் தோன்றும். அதனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு அடங்கிய அறிவியல் பாடத்தில், செய்முறைத் தேர்விற்கான 25 மதிப்பெண்களில் தேர்ச்சிக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண் 15க்கு குறைவாக பெற்று தேர்ச்சி அடையாதவர்கள் கண்டிப்பாக செய்முறைத் தேர்வினை மீண்டும் செய்வதோடு எழுத்துத் தேர்விற்கும் வருகை புரிய வேண்டும். அறிவியல் பாட செய்முறை பயிற்சி பெற்று, பத்தாம் வகுப்பு அறிவியல்பாட செய்முறைத் தேர்வுக்கு வருகைபுரியாதோர், நடைபெறவுள்ள செப்டம்பர் / அக்டோபர் 2017 துணைத்தேர்வு அறிவியல் பாட செய்முறைத் தேர்வெழுதுவதோடு அறிவியல்பாட கருத்தியல் தேர்வையும் மீளவும் கண்டிப்பாக எழுத வேண்டும். செய்முறைத் தேர்வெழுத வேண்டிய தனித்தேர்வர்களுக்குத் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மையத்திலேயே 18.09.2017, 19.09.2017 மற்றும் 20.09.2017 ஆகிய மூன்று நாட்களில் செய்முறைத் தேர்வு நடத்தப்படும். எனவே, இத்தேர்வர்கள் உரிய தேர்வு மைய தலைமையாசிரியரை மேற்படி நாட்களில் அவசியம் அணுகுமாறு கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உரிய தேர்வுக் கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**ஒம்/–**

**இயக்குநர்**

**சென்னை – 600 006**
**நாள்: 14. 09. 2017**

# SSLC EXAM SEPTEMBER /OCTOBER 2017 HALL TICKET INSTRUCTIONS

## <u>தேர்வர்களுக்கான முக்கிய அறிவுரைகள்</u>

- தேர்வர்கள் தேர்வெழுத வரும்பொழுது அனுமதிச் சீட்டினை அறைக் கண்காணிப்பாளரிடம் காண்பித்தால் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.
- தேர்வர்கள் அலைபேசிகளையோ அல்லது இதர தொலைத் தொடர்பு சாதனங்களையோ தேர்வு வளாகத்தினுள்/தேர்வு அறையினுள் கட்டாயமாக கொண்டு வரக்கூடாது.
- அறிவியல் செய்முறைத் தேர்வுகள் . **18.09.2017, 19.09.2017 மற்றும் 20.09.2017** ஆகிய மூன்று நாட்களில் மேற்படி தேர்வு மையத்திலேயே நடைபெற உள்ளது. இத்தேர்வை எழுதும் தேர்வர்கள் தவறாமல் மேற்படி நாட்களில் தேர்வு மைய தலைமையாசிரியரை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
- தேர்வர்கள் விடைத்தாளில் எக்காரணம் கொண்டும் ஸ்கெட்ச் பேனாவையோ அல்லது வண்ண பென்சில்களையோ பயன்படுத்தி எழுதுதலோ அல்லது அடிக்கோடிடுதலோ கூடாது.
- தேர்வர்கள் விடைத்தாள் புத்தகத்தில் உள்ள பக்கங்களை எக்காரணம் கொண்டும் கிழிக்கவோ அல்லது தனியாக பிரித்து எடுத்துச் செல்வதோ கூடாது.
- தேர்வர்கள் துண்டுத்தாள் வைத்திருத்தல், பிற தேர்வர்களை பார்த்து எழுதுதல், துண்டுத்தாளை பார்த்து எழுதுதல், விடைத்தாளை பரிமாறி கொள்ளுதல், ஆள்மாறாட்டம் செய்தல் மற்றும் தமது *விடை*த்தாளில் தாம் தேர்வெழுதிய அனைத்து விடைகளையும் தாமே கோடிட்டு அடித்தல் போன்ற நிகழ்வுகள் ஒழுங்கீனச் செயல்களாக கருதப்பட்டு அதற்குரிய தண்டனைகள் வழங்கப்படும் என எச்சரிக்கப்படுகிறார்கள். எனவே தேர்வர்கள் அவ்வாறான தவறான செயல்களில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- பார்வை மாற்றுத் திறனாளி உட்பட அனைத்து மாற்றுத் திறனாளி தேர்வர்கட்கும் அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 10.02.2010 அரசாணை (நிலை) எண் 23, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 11.02.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.54, பள்ளிக் கல்வி ஜிஇ (1) துறை, நாள் 29.02.2016 –ன்படி பொது தேர்வெழுத சலுகைகள் வழங்கப்படுகிறது.

**இணை இயக்குநர் (பணியாளர்)**
**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

## <u>Important Instructions to Candidates</u>

- The candidate will be permitted to appear for the examination only on the submission of the Hall Ticket to the hall supervisor.
- Candidates are strictly instructed not to bring mobile phones or any other communicative devices inside the Examination Centre/Hall.
- Science Practical examinations will be held on **18.09.2017, 19.09.2017 and 20.09.2017** at the above mentione exam centres. Candidates are instructed to contact the concerned Centre Headmaster on these days without fail.
- Candidates should not tear off or remove any pages from the answer booklet.
- Candidates should not use sketch or colour pencils for writing/underlining etc in answer booklet.
- Candidates should avoid involving themselves in Malpractices like Possession of bit papers, Copying from other candidates, Copying from bit papers, Substitution of Answer books, Impersonation, Fully striking all the answers written in the answer script by themselves, which may lead to punishments. Therefore,the candidates are strictly warned not to involve in those activities.
- All differently abled candidates including visually challenged candidates will be given concessions as per G.O. (Ms) No.28, School Edn (V1) Dept dt 10.02.2010, & G.O. (Ms) No.23, School Edn (V1) Dept dt 11.02.2013 and G.O. (Ms) No.54, School Edn GE(1) Dept dt 29.02.2016

**Joint Director (P)**
**D.G.E. CHENNAI -6**